மூன்று பிரிவாகப் பிரித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது விசாரணையில் இருக்கிறது. வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று விளக்கமாகப் பதில் சொல்ல முடியும்.

திரு. மி. வின்சென்ட்: தனியார் பஸ்களை தேசவுடைமையாக்குவது பற்றி அரசு நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இந்த அரசைப் பொறுத்த வரை தனியாருடைய பேருந்துகளை தேசியமயமாக்க வேண்டுமென்று கருதினாலும் இன்றைய தினம் இருக்கும் சூழ் நிலையில் எங்கு பார்த்தாலும் பேருந்து வேண்டுமென்று கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்ற நிலையில் ஆண்டு தோறும் 1,500 பேருந்துகள் வாங்கினாலும் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்ற அச்சம் இருக்கும் நிலையில் இப்போதுள்ள தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு படிப் படியாக தனியார்களுடைய பேருந்துகளை அரசுக்குச் சொந்த மாக்கலாம் என்ற கருத்தில் இந்த அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்கான பயணச்சீட்டுகளை அச்சடிக்கும் பணி.

*வினா எண். 58—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசை சேர்ந்த போக்குவரத்துக்கழகங்கள் பயணச்சீட்டுகளை தனியார் அச்சகங்களில் அச்சிடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) பல்லவன் போக்குவரத்துக்கழகம் (பெருநகர்) பிரிவுக்குத் தேவையான பயணச்சீட்டுகளின் ஒரு பகுதியும், மற்ற போக்குவரத்துக் கழகங்களில் தேவையான பயணச் சீட்டுகளும் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றன.

தற்பொழுது பயணச் சீட்டுகளை அச்சடிக்கும் பணி, நன்கு பெயர் வாங்கிய அச்சகங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்றன. இந்த முறை போக்குவரத்துக் கழகங்களுக்கும், பயணம் செய்பவர்களுக்கும் திருப்தி அளிக்கும் வகையில் செயல்படுகிறது. ஆகையால் தற்போது இந்த முறையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1981 ஆகஸ்ட் 25]

திரு பெ. சு. திருவேங்கடம் : ஏற்கனவே இந்தப் பேரவையிலே, ஒரே எண்ணுள்ள டிக்கட்டுகள் அச்சடிக்கப்பட்டிருப்பது பற்றி யெல்லாம் உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். எண்கள் இல்லாத டிக்கட்டுகள் கூட அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் அச்சகத்தில் குறைபாடுகள் இருக்கின்றன என்றால் போக்குவரத்துக் கழகங்கள் தங்களுக்கு என்று அச்சகத்தை ஏற்படுத்திக் கொள்வது நலமாக இருக்கும். இதுவரை இல்லை யென்றாலும் இனிமேலாவது எல்லா போக்குவரத்து தலைமை யிடங்களிலும் அச்சகத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படிப்பட்ட ஒரு நட வடிக்கை தேவை என்ற முறையில் பெருநகர் பிரிவில் ஓரளவுக்கு நாமே அச்சடித்துக் கொள்கிறோம். ஆனால் முழுவதும் நாமே அச்சடிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பெருநகரில் நம்முடைய அச்சகத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை எல்லா போக்கு வரத்துக் கழகங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்றாலும் அது உடனடியாகச் செய்யப்பட முடியாது. போக்குவரத்துக் கழகங் களுக்குத் தேவையான பல்வேறு உதிரி பாகங்களை தனியார் நிறுவனங்களிலிருந்து வாங்காமல் நாமே தயாரிக்கவேண்டுமென்ற முறையில் அமைப்பு ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. டயர் புதுப்பிக்கும் வேலைகளை நாமே செய்து கொண்டிருககிறோம். அதே போன்று இதையும் படிப்படியாக நம்முடைய போக்கு வரத்துக் கழகமே செய்யும்.

[முற்பகல் 10.10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப்படி தனியார் அச்சகங்களுக்கு அச்சடிக்கக் கொடுக்கிறபோதே நல்ல அச்சகமாகப் பார்த்துக் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நல்ல அச்சகம் என்பதை எப்படித் தேர்ந் தெடுக்கிறார்கள் ? எந்த அடிப்படையில் அவர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : உதாரணமாக ''டான்சி'' என்று சொல்லலாம். இது ஓரளவிற்கு அரசாங்கத்தோடு சம்பந்தப் பட்டு இருக்கின்ற காரணத்தாலே அதற்குக் கொடுக்க வேண்டு மென்று முடிவு எடுக்கிறோம். அனுபவத்திலே எது சரியாக இருக்கிறது, எதிலே தவறுகள் நடக்கின்றன என்பதைப் பார்த்துத் தான் பொறுக்கி எடுக்கிறோம். பொறுக்கி எடுக்கிறோம் என்றால் தனியாக அவர்களை அழைத்துக் கொடுப்பதில்லை. டெண்டர்கள் கேட்கப்பட்டு யார் குறைவாகக் கேட்கிறார்களோ அவர்களுக்கு அவர்கள் தவறு செய்யாதவர்களாக இருந்தால் கொடுக்கிறோம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : சென்னை நகரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய அச்சகத்துறையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை அரசின் முன்பாக வைத்து மற்றத் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற சலுகைகள் அனைத்தும் தங்களுக்கும் தரப்பட வேண்டுமென்று வேண்டியிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும், போக்குவரத்துக் கழகத்தின் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியமும், சலுகைகளும் அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இது அச்சகத்தைப்பற்றிய கேள்வி தானே ஒழிய அச்சகத் தொழிலாளர்களைப்பற்றிய கேள்வியல்ல. இருந்தாலும் கூட பதில் சொல்கிறேன். பல்வேறு துறையினர் செய்கின்ற வேலையைப் பிரித்துப் பார்த்து அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள். ஆகவே தேவையில்லை என்று அரசு நினைக்காது. சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவற்றை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள்

* வினா எண் 59 திரு எம். சின்னசாமி : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் அதிகாரப்பற்றற்ற (Non-officials) உறுப்பினர்கள் எவ்வளவு பேர் ?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஏழு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

(இ) நிர்வாகக் குழு உறுப்பினர்களில் அதிகாரப் பற்றற்ற (Non-officals) உறுப்பினர்கள் இல்லை.

திரு எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் உதவியுடன் இயங்கும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்கள், எல்லாத் திட்டங்களுமே நட்டத்தில் தான் இருக்கின்றன.